செய்தி வெளியீடு எண்:759 நாள்:21.09.2021

செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு அரசின் உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு.அர .சக்கரபாணி அவர்கள் மாண்புமிகு ஒன்றிய வர்த்தகம், தொழில்துறை, நுகர்வோர் நலம், உணவு மற்றும் பொது விநியோகத்திட்ட அமைச்சர் திரு.பியூஸ் கோயல் அவர்களை இன்று 21-09-2021, உத்யோக்பவானில் சந்தித்துப் பேசினார். இச்சந்திப்பின்போது தமிழ்நாடு மாநிலத்திற்கு வரவேண்டிய உணவு மானிய நிலுவைத்தொகை மற்றும் உணவுத்துறை குறித்த கோரிக்கைகளை வலியுறுத்தினார் .இச்சந்திப்பின்போது மாண்புமிகு தமிழ் நாடு அரசின் புதுடில்லிக்கான சிறப்புப் பிரதிநிதி திரு A K S விஜயன் ,மாண்புமிகு திண்டுக்கல் பாராளுமன்ற மக்களவை உறுப்பினர் திரு P .வேலுசாமி, தமிழ்நாடு அரசின் கூட்டுறவு, உணவு (ம) நுகர்வோர் பாதுகாப்புத் துறை கூடுதல் தலைமைச்செயலாளர் திரு.முகமது நசிமுத்தின் இ.ஆ.ப., தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகமேலாண்மை இயக்குனர் திரு.வி.ராஜாராமன்.இ.ஆ.ப.,தமிழ்நாடு அரசின் முதன்மை உள்ளுறை ஆணையாளர் திரு.அஷிஷ் சாட்டர்ஜி. இ.ஆ.ப., ஆகியோரும் உடனிருந்தனர்.

*********

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9